ஓம்

# விபூதியின் மகிமையும் செயற்பாடும்



**பாலர் ஞானோதய சபையின் 35 ஆவது**

இலவச வெளியீடாக

இது வெளியிடப்படுகின்றது.

# முன்னுரை

இன்றைய இளஞ்சந்ததியினர் விபூதி அணியும் முறைகளை அறியாது செயற்படுகின்றனர். சிலர் வியாபார நோக்குடன் விபூதியை உண்டாக்குகின்றார்கள். இதனைக் கருத்திற் கொண்டு நமக்கு எட்டியவாறு நூல்களில் இருந்து விதிமுறைகளைத் திரட்டி இதனைத் தருகின்றோம். ''நீறில்லா நெற்றி பாழ்'' என்ற முதுமொழிக்கு அமைய விபூதியை அணிந்து ஆண்டவன் அருளைப் பெறுவோமாக.

தேவஸ்தான
பிரதம சிவாச்சாரியார்



உ

கணபதி துணை

# விபூதியின் மகிமையும் செயற்பாடும்

சைவசமய மரபிற் பிறந்த அனைவரும் தினந் தோறும் சூரிய உதயத்திற்கு முன் நித்திரை விட்டு எழுந்து மலசலங் கழித்துச் (சௌசம் பண்ணி) சுத்தஞ் செய்து, தந்த சுத்தி செய்து (பல்துலக்கி) முகம் கழுவி விபூதி அணிய வேண்டும்.

1. சைவ சமயிகளின் அடையாளம் என்ன?

விபூதி

2. விபூதியை எவ்வாறு உண்டாக்குவது?

நோயில்லாத நல்ல பசுவின் சாணத்தை எடுத்து உலர்த்தி உமியினால் நன்குமூடி அக்கினியினாலே தகித்தலால் உண்டாக்கிய திருநீறு விபூதி எனப் படும். கருநிறவிபூதி, செந்நிற விபூதி இவைகள் தரிக்கலாகாது.

வெண்ணிற விபூதியைச் சுத்தமான வஸ்த்திரத் தினாலே வடித்தெடுத்துப், புதுப் பாத்திரத்திலே இட்டுச் சுத்தமான வஸ்திரத்தினாலே அதன் வாயைக்கட்டி வைத்துக்கொள்ள வேண்டும். நித்திய பாவனைக்கு வேண்டியவற்றைப் பட்டுப் பையிலாயினும் சம்புடத்திலாயினும் எடுத்து வைத்துக்கொள்ள வேண்டும்.

3. விபூதியை எவ்வாறு வாங்க வேண்டும்?

ஆசாரியராயினும், சிவனடியாராயினும் விபூதி தந் தால் அவர்களை நமஸ்கரித்து எழுந்து கும்பிட்டு இரண்டு கைகளையும் நீட்டி வாங்க வேண்டும்.

4. விபூதியை எவ்வாறு தரிக்க வேண்டும்?

வடக்கு முகமாகவேனும் கிழக்கு முகமாகவேனும் இருந்துகொண்டு சிவ சிவ சிவ என்று மூன்று முறை சொல்லி நடு விரல் மூன்றினாலும் எடுத்து அண்ணாந்து நெற்றியிலே தரித்தல் வேண்டும்.

5. விபூதியை எவ்வாறு தரித்தல் ஆகாது?

பொட்டாகவும், சதுரமாகவும், ஒரு விரலினாலேனும், ஒரு கையிலாலேனும் தரிக்கக் கூடாது. கரிந்த விபூதியும், சிவந்த விபூதியும் அணியக் கூடாது. நடந்து கொண்டும், கிடந்து கொண்டும் தரிக்கக் கூடாது. இவை சிவாகமவிதி.

6, விபூதி தாரணம் எத்தனை வகைப்படும்?

உத்தூளனம், திரிபுண்டரம் என இரண்டு வகைப்படும்.

7. உத்தூளனம் என்றால் என்ன?

விபூதியை எடுத்து தேகம் முழுவதும் பூசிக் கொள்வது உத்தூளனம் எனப்படும்.

8. திரிபுண்டரம் எவ்வாறு தரிக்க வேண்டும்?

நெற்றியில் இரண்டு கடைப்புருவ எல்லை நீளமும், மார்பிலும், புயங்களிலும் அவ்வாறு அங்குல நீளமும் தரிக்கவேண்டும் இதிற் கூடினாலும், குறைந்தாலும் குற்றமாம்.

9. திரிபுண்டரம் தரிக்கும் தானங்கள் எவை?

சிரம், நெற்றி, மார்பு, கொப்பூழ், முழந்தாள்கள் இரண்டு, புயங்கள் இரண்டு, முழங்கைகள் இரண்டு, மணிக்கட்டுகள் இரண்டு, விலாப்புறம் இரண்டு, முதுகு, கழுத்து என்னும் பதினாறுமாம்.

10. விபூதி தரிக்கும் காலங்கள் எவை?

சந்தியாவந்தனஞ் செய்யும் காலங்களிலும் சூரிய உதயம், அஸ்தமனம் ஆகியவற்றின் போதும்

ஸ்நானஞ் செய்த உடனும் பூசைக்கு முன்னும் பின்னும் நித்திரைக்கு முன்னும் பின்னும் மலசல விமோசனஞ் செய்து சுத்திபண்ணி ஆசமித்த பின்னும் அவசியம் தரிக்க வேண்டும்.

11. தீட்சை பெறாதவர்கள் எங்ஙனம் தரிக்கவேண்டும்?

தீட்சை பெற்றவர்கள் சந்தியாவந்தனம் செய்யும் பேரது நீரினாலே குழைத்துத் தரிக்க வேண்டும். தீட்சை பெறாதவர்கள் நீரிற் குழையாது அணிய வேண்டும்.

12. வியாதியாளருக்கு என்ன பரிகாரம்?

நோய்காரணமாக ஸ்நானஞ்செய்யமாட்டாதவர் கை, கால், முகம் கழுவி ஈரவஸ்திரத்தினாலே உடம்பைத்துடைத்து உலர்ந்த வஸ்திரத்தினாலே ஈரந்துவட்டி கிழக்கு நோக்கி இருந்து ஆசமனம் அநுட்டானம் ஆகியவை செய்ய வேண்டும். அதுவுஞ் செய்ய மாட்டாதவர்கள் விபூதியை அணிந்து சிவமூலமந்திரத்தைச் சிந்திக்க வேண்டும்.

13. மாதர்கள் அநுட்டிக்கவேண்டிய விதியாது?

வீட்டுக்கு விலக்காயுள்ள பெண்கள் மூன்று நாட்கள் சென்று நான்காவது நாள் அப்பியங்கஸ்நானஞ்செய்து தோய்த்துலர்ந்த உடை அணிந்து அநுட்டானஞ் செய்து சத்தியோசாத மந்திரத்தைநூறுருச் செபிக்க வேண்டும். தீட்சை பெற்ற பெண்கள் மாதந்தோறும் இவ்விதமாக அநுசரிப்பதே விதியாகும்.

14. விபூதி நிலத்திலே சிந்தினால் என்ன செய்ய வேண்டும்?

சிந்திய விபூதியை எடுத்துவிட்டு அந்த இடத்தைச் சுத்தி செய்ய வேண்டும்.



பவளமால் வரையி னிலவெறிப் பதுபோற்
பரந்தநீற் றழகுபச் சுடம்பிற்
றிவளமா துடனின் றாடிய பரமன்
சிறுவனைப் பாரதப் பெரும்போர்
தவளமா மருப்பொன் றொடித்தொரு கரத்திற்
றரித்துயர் கிரிப்புறத் தெழுதுங்
கவளமா களிற்றின் றிருமுகம் படைத்த
கடவுளை நினைந்துகை தொழுவாம்.

